# மின்சார வாரியத்தை மறு சீரமைத்தல்

தமிழ் நாடு மின்சார வாரியம் 1957–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 –ஆம் தேதி நிறுவப்பட்டு மின் உற்பத்தி, மின் தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மான பணிகளை மேற்கொண்டு இயங்கி வந்தது.

மின்சார சட்டம் 2003 பிரிவு 131–ன் கீழ் மாநில மின்சார வாரியங்கள் பிரிக்கப்பட வேண்டும். தமிழக அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்தை மறுசீரமைப்பு செய்வதற்கு கொள்கை ரீதியிலான ஒப்புதலை அரசு ஆணை எண். 114 நாள். 08.10.2008 – ன் வாயிலாக வழங்கியுள்ளது. இதன்படி தமிழ் நாடு மின்சார வாரியம், தநாமிவா நிறுவனம் (TNEB Ltd) என்ற உடமை நிறுவனம், தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம் (Tamil Nadu Transmission Corporation Ltd.) மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ( Tamil Nadu Generation and Distribution Corporation Ltd.) என்ற இரண்டு துணை நிறுவனங்கள் என மூன்று நிறுவனங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று நிறுவனங்களும் முழுமையாக அரசாங்கத்திற்கு சொந்தமானவை என்ற நிபந்தனையுடன் நிறுவப்பட்டுள்ளன.

அரசு ஆணை எண் 38 நாள் 21.05.2009 – ன் படி தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம் (TANTRANSCO) பதிவு செய்வதற்குண்டான அனுமதியை தமிழக அரசு வழங்கியது அதனடிப்படையில் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் 15.06.2009 அன்று ரூபாய் 5 கோடி அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகத்தின் பணித்துவக்க சான்றிதழ் 11.12.2009 அன்று பெறப்பட்டு பூஜ்ய இருப்புடன் 14.01.2010 அன்று முதல் பணிகளை துவங்கியது.

அரசு ஆணை எண் 94 நாள் 16.11.2009 – ன் படி தநாமிவா நிறுவனம் (TNEB Ltd), மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ( Tamil Nadu Generation and Distribution Corporation Ltd.) பதிவு செய்வதற்குண்டான அனுமதியை தமிழக அரசு வழங்கியது. அதன் அடிப்படையில் தநாமிவா (TNEB Ltd), மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ( Tamil Nadu Generation and Distribution Corporation Ltd.) 01.12.2009 அன்று ரூபாய் 5 கோடி அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் 5 லட்சம் ரூபாய் பண மூலதனத்துடனும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தநாமிவா நிறுவனத்திற்கு (TNEB Ltd), மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ( Tamil Nadu Generation and Distribution Corporation Ltd.) பணித்துவக்க சான்றிதழ் முறையே 12.03.2010 மற்றும் 16.03.2010 அன்று பெறப்பட்டது.

தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகத்தின் (TANTRANSCO) தலைவர்(Chairman), மேலாண்மை இயக்குநர்(Managing Director) மின்தொடரமைப்பு கழகத்தின் இயக்குநர்கள் அவர்களை பணி நியமனம் செய்வதற்கான ஆணையை(ஆணை எண். 103 நாள் 11.12.2009–ன்) படி தமிழக அரசு வழங்கியது. அதன் அடிப்படையில் அவர்கள் 14.12.2009 அன்று பணியேற்றனர். இயக்குநர்/இயக்குதல் அவர்கள் அரசு ஆணை எண் 36 நாள் 05.04.2010 படி பணிநியமனம் செய்யப்பட்டு 08.04.2010அன்று பணியேற்றார்.

தநாமிவா நிறுவனத்திற்கு (TNEB Ltd), மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ( Tamil Nadu Generation and Distribution Corporation Ltd.) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (Chairman cum Managing Director), மற்றும் இயக்குநர்கள் அரசு ஆணை எண் 36 நாள் 05.04.2010 படி பணிநியமனம் செய்யப்பட்டு 08.04.2010அன்று பணியேற்றனர்.

பொறுப்புகள் மற்றும் சொத்து பரிமாற்றம் மற்றும் பணியாளர்களின் இடமாற்றம் ஆகியவற்றின் தமிழ் நாடு மின்சார வாரியம் (மறு சீரமைப்பு மற்றும் சீர்திருததங்கள்) பரிமாற்றத்திட்டம் 2010 அரசு ஆணை எண் 100 நாள் 19.10.2010 படி 01.11.2010 முதல் நடைமுறைபடுத்த அனுமதி வழங்கப்பட்டது. இதனடிப்படையில்_தமிழ்நாடு மின்சார வாரியமானது 01.11.2010 முதல் மறு சீரமைக்கப்பட்டது.

மேற்படி பரிமாற்ற திட்டத்தின்படி சொத்து பரிமாற்றம் ஒருவருட காலத்திற்குள் அதாவது 31.10.2011 –க்குள் மற்றும் பணியாளர்களின் இடமாற்றம் மூன்று வருடங்களுக்குள் அதாவது 31.10.2013 க்குள் இறுதிசெய்யப்படவேண்டும்,

பின்னர், தமிழ் நாடு மின்சார வாரியத்தின் கோரிக்கையின்படி தமிழக அரசு பரிமாற்றத்திட்டத்தில் பொறுப்புகள் மற்றும் சொத்துப்பரிமாற்றம் செய்வதற்கான காலக்கெடுவை 31.10.2014 வரை நீட்டித்து திருத்தங்களை கீழ்கண்ட அரசு ஆணை எண்களின்படி அறிவித்தது.

அரசு ஆணை எண். 02 நாள். 02.01.202 – 31.10.2012 வரை நீட்டிக்கப்பட்டது.
அரசு ஆணை எண்.23 நாள்.08.03.2013 – 30.04.2013 வரை நீட்டிக்கப்பட்டது.
அரசு ஆணை எண்.106. நாள்.05.12.2013 – 31.10.2013 வரை நீட்டிக்கப்பட்டது.
அரசு ஆணை எண்.35. நாள்.13.05.2014 – 30.04.2014 வரை நீட்டிக்கப்பட்டது.
அரசு ஆணை எண்.89. நாள்.27.11.2014 – 31.10.2014 வரை நீட்டிக்கப்பட்டது.
அரசு ஆணை எண் 49 நாள் 13.08.2015 வாயிலாக தமிழ் நாடு மின்சார வாரியத்திலிருந்து மறுசீரமைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு 01.11.2010 அன்று உள்ளபடி சொத்து மற்றும் பொறுப்பு மாற்றத்திற்கான இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டது.

அரசு ஆணை எண். 100 நாள் 19.10.2010இன் படி தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருந்து மறுசீரமைக்கப்பட்ட மூன்று அரசு நிறுவனங்களுக்கான பணியாளர்களின் இடமாற்றம் 31.10.2013 தேதிக்குள் இறுதி செய்யப்பட வேண்டும். முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்கனவே அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது . இது மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது. தமிழ் நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் 66 கிலோ வோல்ட் துணைமின் நிலையம் மற்றும் அதன் தொடர்புடைய மின் பாதைகள், பிரத்தியேகமான மின் கட்டமைப்பு விரிவாக்கங்களை மாற்றுவதற்கான பணிகள் நடைபெற்றுவருகிறது. இந்த பணிகளை முடிக்க 30.04.2018 வரை அனுமதி, தமிழக அரசு ஆணை எண். 36 நாள் 13.05.2014, 48 நாள் 13.08.2015, 32 நாள் 25.04.2017 மற்றும் 36 நாள் 17.04.2018 வாயிலாக வழங்கியுள்ளது.

*****